# தூத்துக்குடி மாநகராட்சி

## சாதாரண கூட்டப் பொருள்

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் நாள் புதன்கிழமை காலை 10.15 மணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான விதி எண் 156(1) கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| 31.12.2025 | 1) தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொத்தமாக எட்டு அம்மா உணவகங்கள் தற்போது செயல்பட்டுவருகிறது. மேற்படி அம்மா உணவகங்களில் தற்போது 67 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி பணியாளர்களுக்கு நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.325/- வீதம் பணியாளர்களது வருகையின் அடிப்படையில் மாத ஊதியம் வழங்கப்பட்டுவருகிறது. மேற்படி பணியாளர்களுக்கு 26.03.2025 முதல் 25.11.2025 வரையிலான காலங்களுக்கு வழங்கப்பட்ட ஊதியத்திற்கான செலவினத்தொகை ரூ.53,33,575/- பொது நிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டுவந்துள்ளது. மேற்படி செலவினத்திற்கான மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.<br>மேலும், 26.11.2025 முதல் 25.03.2026 வரையிலான காலங்களுக்கு (120 நாட்கள்) மேற்படி பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.325/- வீதம் வழங்கக்கூடிய ஊதியம் தோராயமாக ரூ. 26,13,000/- (120 X 67 X 325) செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. 26.03.2025 முதல் 25.11.2025 வரையிலான காலங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினத்தொகை ரூ. 53,33,575/-க்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>2. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ1/1848/2023 | 736)அலுவலகக் குறிப்பு அ பின்னேற்பு வழங்கப்பட்டது. ஆ அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>2) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ல் உள்ள வரி மற்றும் வரியில்லா இனங்களுக்கான விதிகளில் சில விதிகளுக்கான திருத்தங்களுடன் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் அரசாணை எண். 480, நாள். 16.12.2025 வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் சொத்துவரி பெயர்மாற்ற கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் மூன்றாண்டு கால முடிவிற்கான புதுப்பித்தல் கட்டணம் முதலியன மாற்றம் செய்யப்பட்டுள்ள விபரம் அடங்கிய அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>அ1/0963/2022</td>
<td>737)அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>3) தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சிதம்பரநகர் வணிக வாளாகத்தில் காலியாக உள்ள அனைத்து கடைகளுக்கும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நான்கு மண்டல அறிவிப்பு பலகையில் 12.11.2025 அன்று வெளியிடப்பட்டு, 19.11.2025 (புதன்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு, ஏலம் கோர எந்த நபரும் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தபுள்ளித்தாரர்கள் முன்னிலையில், வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் உதவி ஆணையர் (வ)(பொ) அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td colspan="4">சிதம்பரநகர் வணிக வளாக கடை எண் : G2</td></tr>
<tr><td colspan="4">மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்பட்ட குறும தொகை ரூ. 12,600/-</td></tr>
<tr><td>வ.எண்</td><td>பெயர் (ம) முகவரி</td><td>ஒப்பந்தபுள்ளியில் கோரிய தொகை ரூ.</td><td>குத்தகை காப்பு வைப்புத் தொகை செலுத்திய விபரம்</td></tr>
<tr><td>1</td><td>திரு. ந.ஏகாந்த லிங்கம்<br>1/523D, பர்மா காலனி<br>ஹவுசிங்போர்டு,</td><td>12,650/-</td><td>ரூ. 1,00,000/-<br>DD NO 129383</td></tr>
</table>
</td>
<td>738)அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ ஒப்புதல் வழங்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | தூத்துக்குடி | | Dt. 18.11.2025 SBI |
| 2 | திருமதி. ரா.இந்திரா 153 C/1, S.M. புரம் 5வது தெரு, தூத்துக்குடி. | 12,700/- | ரூ. 1,00,000/- DD NO 899929 Dt. 18.11.2025 Indian Bank |
| உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி கேள்வி – திருமதி ரா.இந்திரா ரூ. 12,700/- | | | |

| சிதம்பரநகர் வணிக வளாக கடை எண் : G8 | | | |
|---|---|---|---|
| மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்பட்ட குறும தொகை ரூ. 17,720/- | | | |
| வ.எண் | பெயர் (ம) முகவரி | ஒப்பந்தபுள்ளியில் கோரிய தொகை ரூ. | குத்தகை காப்பு வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
| 1 | திரு. S.மாரியப்பன் 5/281/1, அன்னை இந்திராநகர் முதல்தெரு, தூத்துக்குடி | 17,760/- | ரூ. 1,00,000/- DD NO 040727 Dt. 18.11.2025 Indian Bank |
| 2 | திரு. M.கணேஷ் நாகராஜன் 25/24/1 மகிழ்ச்சிபுரம், அண்ணாநகர் 12 மேற்கு தூத்துக்குடி. | 17,810/- | ரூ. 1,00,000/- DD NO 943200 Dt. 17.11.2025 City Union Bank |

உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி கேள்வி – திரு. M.கணேஷ் நாகராஜன் ரூ. 17,810/–

| | | | |
|---|---|---|---|
| சிதம்பரநகர் வணிக வளாக கடை எண் : G14 | | | |
| மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்பட்ட குறும தொகை ரூ. 21,800/– | | | |
| வ.எண் | பெயர் (ம) முகவரி | ஒப்பந்தபுள்ளியில் கோரிய தொகை ரூ. | குத்தகை காப்பு வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
| 1 | திருமதி. ரா.மோனிஷா க/பெ. ஏமராஜ் 18 மாரியம்மன் கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் | 22,000/– | ரூ. 1,00,000/– DD NO 129385 Dt. 18.11.2025 SBI |
| 2 | திரு. ம.ஜெகதீஸ் ஆசிர் த/பெ. மனுவேல் 111/11S/1 I, SKR காலனி தூத்துக்குடி. | 21,900/– | ரூ. 1,00,000/– DD NO 129384 Dt. 18.11.2025 SBI |
| உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி கேள்வி – திருமதி. ரா.மோனிஷா ரூ. 22,000/– | | | |

அ) மேற்குறிப்பிட்டவாறு சிதம்பரநகர் வணிக வளாகத்தில் G2, G8 & G14 ஆகிய மூன்று கடைகளுக்கு குறுமத்தொகையை விட கூடுதலாக ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள உயர்ந்தபட்ச கேள்ளிதாரர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்பது குறித்து மாமன்ற பார்வைக்கும் ஒப்புதலுக்காகவும்,

ஆ) சிதம்பரநகர் வணிக வளாக கடைகளில் மொத்தம் 31 கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் மேற்கண்ட மூன்று கடைகள் (G2, G8 & G14) போக மீதமுள்ள கடைகளுக்கு மறு ஏலம் / ஒப்பந்தபுள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள மாமன்ற ஒப்புதலுக்காகவும்,

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு : அ" மற்றும் "ஆ" மாமன்றம் பரிசீலித்து ஒப்புதல் வழங்கலாம்<br>அ16/2822/2022 | |
| | 4) தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட, ஜெயராஜ்ரோடு பல அடுக்கு வாகன காப்பகத்தில் இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துவதற்கு, 20.07.2025 முதல் M/S.பார்க்லென்ஸ் என்ற தனியார் நிறுவனம் மூலம் விகிதாச்சாரம் அடிப்படையில் கட்டணம் வசூல் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 26.03.2024 முதல் 25.02.2025 வரை CLC பணியாளர் மூலம் கட்டணம் வசூல் செய்யும் பணிக்காக ரூ. 6,85,571/- மற்றும் நடப்பு வருடம் 26.03.2025 முதல் 20.07.2025 வரையிலான காலத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் பணிக்காக ரூ. 3,33,726/- யினை தினக்கூலி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டதற்கான செலவின விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்,<br>அலுவலகக்குறிப்பு:- தினக்கூலி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டதற்கான செலவினத்திற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>அ16/3477/2023 | 739)அலுவலகக் குறிப்பு பின்னேற்பு வழங்கப்பட்டது. |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட, வடக்கு மண்டலம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள வாகன காப்பகத்தில், 20.07.2025 முதல் M/S.பார்க்லென்ஸ் என்ற தனியார் நிறுவனம் மூலம் விகிதாச்சாரம் அடிப்படையில் கட்டணம் வசூல் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், 21.07.2025 முதல் பேருந்து நிலைய வளாகத்தில் ஆம்னி பேருந்துகள் வந்து செல்வதற்கான நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணியானது CLC பணியாளர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்காணும் கட்டணம் வசூல் செய்யும் பணிக்காக 26.03.2024 முதல் 25.03.2025 வரை ரூ. 18,96,352/- மற்றும் நடப்பு வருடம் 26.03.2025 முதல் 25.11.2025 வரையிலான காலத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் பணிக்காக ரூ. 6,79,361/- யினை தினக்கூலி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டதற்கான செலவின விபரங்கள் மற்றும் 26.11.2025 முதல் 25.10.2026 வரை ஒரு வருட காலத்திற்கு ஏற்கனவே பணிபுரிந்து வரும் ஒரு தினக்கூலி பணியாளர் தொடர்ந்து பணியாற்றிடவும், அவருக்கு நாள் 1க்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தினக்கூலி ரூ.481/- தொடர்ந்து வழங்கிடவும், அதற்கான | 740)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | சேவை வரி 2% யினை நகர்புற வாழ்வாதார மையத்திற்கு வழங்குதல், மொத்தம் உத்தேசமாக ரூ. 1,80,000/– பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்<br>அலுவலகக்குறிப்பு:–"தினக்கூலி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டதற்கான செலவினத்திற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம் மற்றும் உத்தேச செலவினத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16/02963/2019 | |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட, சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள, பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் (பழைய பேருந்து நிலையம்) வளாகத்தில் 20.07.2025 முதல் M/S.பார்க்லென்ஸ் என்ற தனியார் நிறுவனம் மூலம் விகிதாச்சாரம் அடிப்படையில் உள்ள வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், 21.07.2025 முதல் பேருந்து நிலைய வளாகத்தில் பேருந்து மற்றும் சிற்றுந்து வந்து செல்வதற்கான நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணியானது மாநகராட்சி CLC பணியாளர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டுவருகிறது. மேற்காணும் கட்டணம் வசூல் செய்யும் பணிக்காக 26.03.2024 முதல் 25.03.2025 வரை ரூ.25,16,102/– மற்றும் நடப்பு வருடம் 26.03.2025 முதல் 25.11.2025 வரையிலான காலத்திற்கு ரூ. 11,48,465/– யினை தினக்கூலி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டதற்கான செலவின விபரங்கள் மற்றும் 26.11.2025 முதல் 25.10.2026 வரையிலான ஒரு வருட காலத்திற்கு ஏற்கனவே பணிபுரிந்து வரும் மூன்று தினக்கூலி பணியாளர்கள் தொடர்ந்து பணியாற்றிடவும், அவர்களுக்கான ஊதியம் வழங்குவதற்கு உத்தேசமாக ரூ. 6,60,000/– பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்<br><u>அலுவலகக்குறிப்பு</u> :– "தினக்கூலி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டதற்கான செலவினத்திற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம் மற்றும் உத்தேச செலவினத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16/4967/2023 | 741) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 7) தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் M/S.Sri Devi construction&Labour Contractor கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள | 742) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

பணிக்கு முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகை (ASD) செலுத்தியுள்ளார்.

| S L. N O | Name of Work | Estimate No | EMD | ASD |
|---|---|---|---|---|
| | | | DATE | |
| 1 | Construction of culvert at P&T Colony west (near pump room area)<br>Attending main line leak at north one area ward no 1-8 | 42/19-20 | 4,000/- | 4,000/- |
| | | | 14.11.2019 | 11.12.2019 |
| 2. | Construction of Culvert at State Bank Colony ( Kutty Sankaraperi) and Muthukrishnapuram Main Junction( Near Buckle Odai Approach Road)<br>Construction of Storm Water Drain With Cover Slab arrangement Sethuraja street | 43/19-20 | 3,000/- | 3,000/- |
| | | | 14.11.2020 | 31.12.2019 |
| 3. | Attending main line leak at north zone area ward no:9-13<br>Laying of Distribution water pipe line of 110mm HDPE pipe Construction of Valve Chamber and providing of Sluice valve size of 100mm HDPE main in distribution system at Postal Colony in south zone | 59/20-21 | 5,150/- | 5,150/- |
| | | | 24.11.2020 | 19.02.2021 |
| 4. | Construction of Pump Room Sump at DSF Corner<br>Providing Paver block road at Krishnarajapuram 7th street | 61/20-21 | 6,650/- | 6,650/- |
| | | | 24.11.2020 | 19.02.2021 |
| 5. | | 67/19-0 | 1,950/- | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Providing of Paver Block road at Levenchipuram 1st cross lane | | 03.01.2020 | | |
| | 6. | Construction of culvert at P&T Colony west (near pump room area)<br>Attending main line leak at north one area ward no 1-8 | 95/19-20 | 3,000/-<br>06.01.2020 | - | |
| | 7. | Construction of Culvert at State Bank Colony ( Kutty Sankaraperi) and Muthukrishnapuram Main Junction( Near Buckle Odai Approach Road)<br>Construction of Storm Water Drain With Cover Slab arrangement Sethuraja street | 157/19-20 | 3,200/-<br>24.02.2020 | - | |
| | 8. | Attending main line leak at north zone area ward no:9-13<br>Laying of Distribution water pipe line of 110mm HDPE pipe Construction of Valve Chamber and providing of Sluice valve size of 100mm HDPE main in distribution system at Postal Colony in south zone | 179/19-20 | 1,900/-<br>17.03.2020 | - | |
| | 9. | Construction of Pump Room Sump at DSF Corner<br>Providing Paver block road at Krishnarajapuram 7th street | 182/19-20 | 2,250/-<br>17.03.2020 | - | |
| | | | | 2,970/- | - | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | Providing of Paver Block road at Levenchipuram 1st cross lane | 183/19-20 | 17.03.2020 | |
| | TOTAL | | **34,070/-** | **18,800/-** |
| TOTAL AMOUNT | | | **52,870/-** | |

மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணியினை செய்து முடித்து **3** வருடத்திற்கு மேலாகியுள்ளதால் மேற்படி பணிக்கு செலுத்திய முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகையை (ASD) திரும்ப வழங்குவது, தொடர்பாக சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, எனவே அன்னார் செலுத்திய வைப்புத்தொகையை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அரசாணை எண். எம்.எஸ்.எஉ.**621**/ஊ.வ மற்றும் உள்ளாட்சி துறை நாள்.**08.04.1980**ன் படி அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகையாகும்.

மேற்படி பட்டியலில் கண்டுள்ள காலங்கடந்த முன் வைப்புத்தொகை ரூ.**34,070/-**மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.**18,800/-**என ஆகமொத்தம் ரூ.**52,870/-**னை மேற்படி பணியினை செய்துள்ள M/S.Sri Devi construction&Labour Contractor ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : காலம் கடந்த வைப்புத்தொகை கணக்கில் உள்ள முன் வைப்புத்தொகை ரூ.**34,070/-**மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.**18,800/-**என ஆக மொத்தம் ரூ.**52,870/-**னை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர்,அவர்களின் பரிந்துரைப்படி ஒப்பந்ததாரர் M/S.Sri Devi construction & Labour Contractor என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ5/0542/2025

**8)** தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் திரு.வெங்கடேஷ் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகை (ASD) செலுத்தியுள்ளார்.

**743)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

| S L. N O | Name of Work | Estimate No | EMD | ASD |
|---|---|---|---|---|
| | | | DATE | |
| 1 | Providing Separate 110MM mian to aathiparasakthi nagar | 66/19-20 | 1,580/- | 1,580/- |
| | | | 03.01.2020 | 04.03.2020 |

| | | | | |
|---|---|---|---|---|
| | OHT(Aathiparasakthi nagar OHT) | | | |
| 2. | Attending main line leak at north zone area ward no:9-13 | 7/19-20 | 1,950/- | 1,950/- |
| | | | 03.01.2020 | 04.03.2020 |
| 3. | Construction of Culvert at mattakadai street junction vadi street davis puram east road | 75/19-20 | 2,400/- | 2,400/- |
| | | | 23.12.2019 | 02.01.2020 |
| 4. | Supply and laying and fixing 110mm HDPE main pipes works in VMS Nagar south Supply main | 202/19-20 | 1,900/- | 1,900/- |
| | | | 19.05.2020 | 22.06.2020 |
| 5. | Ponagaram Sewerage water line changing into HDPE main pipe line arrangement work | 24B/20-21 | 990/- | 990/- |
| | | | 26.07.2020 | |
| 6. | Removing rainwater Stagnated area at North Zone Muthammal Colony 6th, Muthammal Colony Park back side, VMS Nagar tower road, Muthammal Colony 2nd Middle, Adhi parasakthi Nagar near OHT, Ayyasamy Colony 1st street | 80E-9/21-22 | 5,050/- | 5,050/- |
| | | | 23.06.2022 | 23.06.2022 |
| | TOTAL | | **13,870/-** | **13,870/-** |
| TOTAL AMOUNT | | | **27,740/-** | |

மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணியினை செய்து முடித்து **3** வருடத்திற்கு மேலாகியுள்ளதால் மேற்படி பணிக்கு செலுத்திய முன்

வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகையை (ASD) திரும்ப வழங்குவது, தொடர்பாக சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, எனவே அன்னார் செலுத்திய வைப்புத்தொகையை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அரசாணை எண். எம்.எஸ்.எஉ.621/ஊ.வ மற்றும் உள்ளாட்சி துறை நாள்.08.04.1980ன் படி அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகையாகும்.

மேற்படி பட்டியலில் கண்டுள்ள காலங்கடந்த முன் வைப்புத்தொகை ரூ.**13,870/-** மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.**13,870/-** என ஆகமொத்தம் ரூ.**27,740/-**னை மேற்படி பணியினை செய்துள்ள திரு.வெங்கடேஷ் ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : காலம் கடந்த வைப்புத்தொகை கணக்கில் உள்ள முன் வைப்புத்தொகை ரூ.**13,870/-** மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.**13,870/-**என ஆக மொத்தம் ரூ.**27,740/-** னை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர்,அவர்களின் பரிந்துரைப்படி ஒப்பந்ததாரர் திரு.வெங்கடேஷ் என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

பி3/0542/2025

744) அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**9)** தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் திரு. சுரேஷ்ஜெயக்குமார் என்பவர் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டுள்ளார்.

| | NAME OF WORK | ESTIMATE NO | DATE | AMOUNT |
|---|---|---|---|---|
| 1 | Construction of sump with 160mm dia HDPE pipe arrangementand pump Room at SBI colony south (Kutty sankaraperi) | 18/21-22 | 06.08.2021 | 10,500/- |
| 2 | Construction of storm water Drain with culvert at kuruvimedu | 30/21-22 | 06.08.2021 | 7,900/- |
| 3 | Construction of sump with 200mm dia HDPE pipe arrangement and pump room at selvanayagapuram V.M.S | 90/21-22 | 07.01.2022 | 12,700/- |
| | மொத்தம் | | **31,100/-** | |

மேற்படி பட்டியலில் கலந்து கொண்டுள்ள பணிகளுக்கு அதிக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் அன்னாருக்கு பணி ஒதுக்கிடு

| | | |
|---|---|---|
| | செய்யப்படவில்லை மேலும் அன்னார் செலுத்திய முன்வைப்பு தொகை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் திரு. சுரேஷ்ஜெயக்குமார் என்பவர் மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு செலுத்திய முன் வைப்பு தொகையை திரும்ப வழங்க கேட்டு விண்ணப்பித்துள்ளார், அன்னார் செலுத்திய மேற்படி பட்டியலில் கண்டுள்ள அனைத்து பணிகளுக்கும் செலுத்திய முன் வைப்பு தொகை ரூ.31,100/-காலங்கடந்த வைப்பு தொகையாக உள்ளதால் அன்னாருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : திரு. சுரேஷ்ஜெயக்குமார் ஒப்பந்ததாரர் என்பவர் பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ளதில் அதிக விலைபுள்ளி கொடுத்துள்ளதால் பணிகள் ஒதுக்கிடு செய்யப்படவில்லை என தொழில்நுட்ப உதவியாளர் அறிக்கையை ஏற்று காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் கொண்டு செல்லப்பட்ட வைப்பு தொகை ரூ.31,100/- திரும்ப வழங்கலாம்.<br>இ5/0810/2025 | |
| | 10) தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் திரு.T.முருகன் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகை (ASD) செலுத்தியுள்ளார்.<br><br>மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணியினை செய்து முடித்து 3 வருடத்திற்கு மேலாகியுள்ளதால் மேற்படி பணிக்கு செலுத்திய முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகையை (ASD) திரும்ப வழங்குவது, தொடர்பாக சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, எனவே அன்னார் செலுத்திய வைப்புத்தொகையை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அரசாணை எண். எம்.எஸ்.எஉ.621/ஊ.வ மற்றும் உள்ளாட்சி துறை நாள்.08.04.1980ன் படி அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகையாகும்.<br>மேற்படி பட்டியலில் கண்டுள்ள காலங்கடந்த முன் வைப்புத்தொகை ரூ.10,000/-மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.10,000/-என ஆகமொத்தம் ரூ.20,000/-னை மேற்படி பணியினை செய்துள்ள திரு.T.முருகன் ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : காலம் கடந்த வைப்புத்தொகை கணக்கில் உள்ள முன் வைப்புத்தொகை ரூ.10,000/-மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.10,000/-என ஆக மொத்தம் ரூ.20,000/-னை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர்,அவர்களின் பரிந்துரைப்படி ஒப்பந்ததாரர் திரு.T.முருகன் என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ5/3336/2025 | 745) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 11) தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் திரு.வெங்கடேஷ் என்பவருக்கு கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு (With Held 5%) வைப்பு தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. | 746) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| SL. NO | Name of Work | Estimate No | DATE | With Held Amount |
|---|---|---|---|---|
| 1. | Providing Separate 110MM main to Aathiparasakthi Nagar OHT (Aathiparasakthi Nagar OHT) | 66/19-20 | 22.04.2020 | 6,144 |
| 2. | Providing Paver Block Road at Loorthammalpuram Sangukuli Colony Opposite Road | 75/20-21 | 16.11.2021 | 10,613/- |
| | TOTAL AMOUNT | | | **16,757/-** |

மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணியினை செய்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து 3 வருடத்திற்கு மேலாகியுள்ளதால் மேற்படி பணியில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை 5% திரும்ப வழங்க மண்டல உதவி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, எனவே அன்னாரது பணிகளில் பிடித்தம் செய்துள்ள (5%) வைப்பு தொகையை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அரசாணை எண். எம்.எஸ்.எஉ.621/ஊ.வ மற்றும் உள்ளாட்சி துறை நாள்.08.04.1980ன் படி அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகையாகும்.

மேற்படி பட்டியலில் கண்டுள்ள காலங்கடந்த வைப்புத்தொகை ரூ.**16,757/-**னை மேற்படி பணியினை செய்துள்ள ஒப்பந்ததாரர் திரு.வெங்கடேஷ் என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : காலம் கடந்த வைப்புத்தொகை கணக்கில் உள்ள பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை ரூ.**16,757/-** னை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர்,அவர்களின் பரிந்துரைப்படி ஒப்பந்ததாரர் திரு.வெங்கடேஷ் என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ5/4317/2024

12) தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் திரு.முத்துராஜலிங்கம் என்பவர் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகை (ASD) செலுத்தியுள்ளார்.

| | Name of Work | Estimate No | EMD | DATE | ASD | DATE |
|---|---|---|---|---|---|---|

747) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | Infra-Gap-Filling Scheme Vallanadu thamirabharani river collection Well & Pump Room. | 21/12-13 | 1,44,000/- | 21.07.2012 | 1,55,000/- | 24.09.2012 |
| | Total | | **1,44,000/-** | | **1,55,000/-** | |
| | **TOTAL AMOUNT** | | **2,99,000/-** | | | |

மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணியினை செய்து முடித்து 13 வருடத்திற்கு மேலாகியுள்ளதால் மேற்படி பணிக்கு செலுத்திய முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகையை (ASD) திரும்ப வழங்குவது, தொடர்பாக இ1 இருக்கை எழுத்தர் வழங்கிய பணி முடிவறிக்கை நாளான 07.10.2020ன் அடிப்படையில், அன்னார் செலுத்திய முன் வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகையை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அரசாணை எண். எம்.எஸ்.எஉ.621/ஊ.வ மற்றும் உள்ளாட்சி துறை நாள்.08.04.1980ன் படி அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகையாகும்.

மேற்படி பட்டியலில் கண்டுள்ள காலங்கடந்த முன் வைப்புத்தொகை ரூ.**1,44,000**/-மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.**1,55,000**/-என ஆகமொத்தம் ரூ.**2,99,000/-**னை மேற்படி பணியினை செய்து முடித்த திரு.முத்துராஜலிங்கம் ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மாமன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : காலம் கடந்த வைப்புத்தொகை கணக்கில் உள்ள முன் வைப்புத்தொகை ரூ.**1,44,000**/-மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.**1,55,000**/-என ஆக மொத்தம் ரூ.**2,99,000/-**னை பணி முடிவறிக்கையின்படி ஒப்பந்ததாரர் திரு.முத்துராஜலிங்கம் என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் முன் அனுமதி அனுமதிக்கலாம்.

இ5/10377/2012

13) தூத்துக்குடி மாநகராட்சி முள்ளக்காடு கிராமம் 1 சர்வே எண் 199/7A ல் 3565.00ச.மீ பரப்பளவு இடத்தில் மனுதாரர் திரு.P.முருகன்,N.ராஜேந்திரன் மற்றும் K.செந்தில் குமார் அவர்களின் குடியிருப்பு மனைப்பிரிவு சாலை அமைப்பு மற்றும் பொது ஒதுக்கீடு இடத்திற்கான வரைபடம் தொழில்நுட்ப அனுமதி எண். SWP/DTCP/THOOTHUKUDI LAYOUT NO.67/2025 Planning Permission No.41/2025 என்று எண்ணிடப்பட்டு 17.04.2025 தேதியில் உறுப்பினர் செயலர்(பொ) தூத்துக்குடி உள்ளூர் திட்டக்குழுமம் தூத்துக்குடி அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

வீட்டு வசதி (ம) நகர்ப்புறம் வளர்ச்சித்துறை அரசாணை எண் G.O.(Ms) No.181 நாள் 09.12.2020ல் குறிப்பிட்டுள்ளபடி மனைப்பிரிவு வரைபடத்தின்படி மனைப்பிரிவில் அமையும் சாலைக்குரிய இடம்

748)அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| | மாநகராட்சிக்கு பொது ஒதுக்கீடு இடத்தினை மாநகராட்சிக்கு தானமாக பதிவுசெய்யப்பட்ட ஆவணம் எண்.1043/2025 நாள்.11.03.2025 மற்றும் மின் வாரியத்திற்கு தானமாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் எண் 1044/2025 நாள்.11.03.2025 உள்ளூர் திட்டக்குழுமத்தின் வழியாக ஆவணம் பெற்று மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>எப்1/1627/2025 | |
| | 14) தூத்துக்குடி மாநகராட்சி முள்ளக்காடு கிராமம் பகுதி.2 சர்வே எண் 109, 110/1, 110/2 ல் 18950ச.மீ பரப்பளவு இடத்தில் மனுதாரர்கள் திரு.ராஜ்குமார் மற்றும் கனகராஜா அவர்களின் குடியிருப்பு மனைப்பிரிவு சாலை அமைப்பு மற்றும் பொது ஒதுக்கீடு இடத்திற்கான வரைபடம் தொழில்நுட்ப அனுமதி எண். SWP/DTCP/THOOTHUKUDI LAYOUT NO.143/2025 Planning Permission No.90/2025 என்று எண்ணிடப்பட்டு 26.08.2025 தேதியில் உறுப்பினர் செயலர்(பொ) தூத்துக்குடி உள்ளூர் திட்டக்குழுமம் தூத்துக்குடி அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>வீட்டு வசதி (ம) நகர்ப்புறம் வளர்ச்சித்துறை அரசாணை எண் G.O.(Ms) No.181 நாள் 09.12.2020ல் குறிப்பிட்டுள்ளபடி மனைப்பிரிவு வரைபடத்தின்படி மனைப்பிரிவில் அமையும் சாலைக்குரிய இடம் மாநகராட்சிக்கு பொது ஒதுக்கீடு இடத்தினை மாநகராட்சிக்கு தானமாக பதிவுசெய்யப்பட்ட ஆவணம் எண்.3439/2025 நாள்.13.08.2025ன்படி மற்றும் மின் வாரியத்திற்கு தானமாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் எண் 3440/2025 நாள்.13.08.2025ன்படி உள்ளூர் திட்டக்குழுமத்தின் வழியாக ஆவணம் பெற்று மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>எப்1/2180/2025 | 749) அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. |
| | 15) மாமன்ற தீர்மானம் எண் 569 நாள் 27.12.2024ன்படி தூத்துக்குடி மாநகராட்சி பாளை ரோடு, நவீன எரியூட்டு தகன மேடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள TEED FOUNDATION, மதுரை நிறுவனத்திற்கு 16.11.2024 முதல் 12 மாத காலத்திற்கு தகன மேடை பராமரிப்பு பணிகளை கொரோனா (கோவிட்–19) தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் சடலங்களை இலவசமாக தகனம் செய்ய வேண்டும் மற்றும் நவீன எரிவாயு தகன மேடை கட்டணமாக வசூல் செய்யப்படும் ரூ.2500/–ல் சடலம் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் எரிக்கப்படும் சடலங்களுக்கு கணக்கிட்டு மாநகராட்சி கருவுலத்தில் செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்து ஒப்பந்த நீட்டிப்பு செய்து ஒப்படைப்பு செய்யப்பட்டது. | 750) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தற்போது மேற்படி கால அளவு நிறைபெறும் நிலையில் உள்ளதால், மேற்படி பொருள் குறித்த அனைத்து பணிகளையும் மேலே குறிப்பிட்டுள்ள தகன மேடை கட்டணமாக வசூல் செய்யப்படும் ரூ.2500/—ல் சடலம் ஒன்றுக்கு ரூ.100/— வீதம் எரிக்கப்படும் சடலங்களுக்கு கணக்கிட்டு மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் SERENITY FOUNDATION,மதுரை நிறுவனத்திற்கு 3 வருட காலத்திற்கு மேற்படி நிபந்தனைக்குட்பட்டு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு. SERENITY FOUNDATION, மதுரை நிறுவனத்திற்கு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அவ்வப்போது வகுக்கப்படும் சட்ட விதிமுறைகள் மற்றும் மாநகராட்சி நிபந்தனைகளுக்கு உட்பட்டு எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்1/4597/2024 | |
| | 16) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட கிழக்கு மண்டலம், 1வது இரயில்வே கேட் பகுதியில் செல்லும் பாதாளச்சாக்கடை குழாய் பழுதடைந்து அடைப்பு ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் கழிவுநீர் தேங்கி சுகாதார கேடு ஏற்பட வாய்ப்புள்ளதால் அதனைச் சரிசெய்யவும், மேலும், மேற்படி இடத்தில் உள்ள Machine Hole யை அகற்றவும் இரயில்வே துறையினரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி பகுதியில் பாதாளச்சாக்கடையில் கழிவுநீர் தங்கு தடையின்றி செல்லும் வகையில், மேற்கண்ட பகுதியின் 1 வது கேட் குறுக்கே 400MM Dia railway crossing Tranche less method ல் கழிவு நீர் பிரதான குழாய் அமைக்கும் பணியினை ரூ. 50.70 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணியினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2025—26ன் கீழ், மேற்கொள்ள, மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு 1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2.மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/ 4961 /2025 | 751)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| | 17) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசின் பல்வேறு திட்டங்களின் வாயிலாக பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காக்களில் பொதுமக்கள் உடற்பயிற்சி செய்வதற்கான நடைபாதைகள், சிறுவர்களுக்கான பொழுபோக்கு விளையாட்டு அம்சங்கள், கழிப்பிட வசதிகள் போன்றவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி பூங்காக்களில் பொதுமக்கள் அதிகளவில் வந்து செல்வதால் இப்பூங்காக்களை முறையாக பராமரிப்பு செய்ய வேண்டியது மிகவும் அவசியமானதாகும். எனவே முதற்கட்டமாக கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள 4 பூங்காக்களில் சுகாதாரம் பணிகள் மற்றும் பூங்கா பராமரிப்பு பணிகளை தனியார் | 752) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

நிறுவனத்தின் மூலம் வெளிகொணர்வு பணியாளர்களை கொண்டு (Outsourcing) செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

| S.NO | ZONE | WARD | PARK NAME | PARK LOCATION |
|---|---|---|---|---|
| 10 | WEST | 32 | M.G.R.Park | Palai Road TMB Colony |
| 22 | WEST | 36 | Rajaji park | Palai Road |
| 31 | EAST | 25 | Muthu Nagar Beach | Beach Road |
| 35 | EAST | 47 | Roach park | South Beach Road |

அதன்படி, மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள 4 பூங்காக்களை பசுமை மாறா வகையில் உரிய முறையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல், பூங்காக்களில் உள்ள கழிப்பிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உகந்தவாறு நல்ல முறையில் பராமரிப்பு செய்தல், போன்ற பணிகளை தனியார் நிறுவனத்தின் மூலம் வெளிகொணர்வு பணியாளர்களை ஈடுபடுத்த ஒப்பந்தப்புள்ளி / விருப்ப கேட்பு முன்மொழிவு (RFP) கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், மேற்படி பூங்காக்களை பராமரிப்பு செய்ய வருடத்திற்கு ஆகும் செலவினம் ரூ.68.00 இலட்சத்தினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இ3/3958/2025

18 தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள ECO Park, கொரானா பெருந்தொற்று காலத்திற்கு பின்பு, பொதுமக்கள் பயன்படுத்திட ஆர்வம் காட்டாமல் இருந்த சூல்நிலையில் அப்பகுதி பராமரிப்பு இன்றி செயல்படுத்தப்படாமல் இருந்தது. தற்சமயம் அபிவிருத்தி பணிகள் துவங்கவுள்ள நிலையில், பொழுது போக்கு அம்சங்களுடன் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைத்துதரப்பினரையும் கவரும் வகையில் அமைக்கப்படவுள்ள ECO Park யினை மாநகராட்சியின் வருவாயினை பெருக்கும் நோக்கிலும், உள்ளூர் பொதுமக்கள் பயன்பெரும் வகையிலும், எதிர்வரும் தமிழர் திருநாள் பொங்கல் அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் நோக்கிலும் திட்டமிடப்பட்டுள்ளது.

753)அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு பாதுகாப்புடன் படகுகளை இயக்குவதற்கும் Paddle Boats, Kayaking, Canoeing, Aqua Cycle போன்ற நீர் சார்ந்த சாகச நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், தமிழ்நாடு சாகச சுற்றுலா சட்டம் 2023ன்படி, பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| | நியமனம் செய்து, ஊதியம், கேன்டின் பராமரிப்பு, சுற்றுப்சூழல் பராமரிப்பு மின் கட்டணம் செலுத்துதல் போன்ற அனைத்து செலவினங்களையும் மேற்கொண்டு, பொதுமக்களிடம் பயன்பாட்டு கட்டணமாக மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் தொகையினை வசூலிக்க அனுமதி கோரி M/S. Run and Ride Park (Thrill Park) என்ற தனியார் நிறுவனத்தால், விருப்ப விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>தென்காசி மாவட்டம் மத்தளம்பாறையில் திரில் பார்க் என்ற பெயரில் நிலம் மற்றும் நீர் சார்ந்த சாகச சுற்றுலா மண்டலம் நிறுவப்பட்டதனை தமிழ்நாடு சுற்றுலாத் துறையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டு, மேற்படி தனியார் நிறுவனம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாலும், மேற்காணும் நீர் சார்ந்த சாகச நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு பொதுமக்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானதாக கருதப்படுவதாலும் அனுபவம் வாய்ந்த திறமை மிகுந்த நிறுவனம் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ் நிலையில்,<br>அ) விருப்ப விண்ணப்பம் சமர்ப்பித்துள்ள M/S. Run and Ride Park (Thrill Park) என்ற தனியார்நிறுவனத்திற்கு தற்காலிகமாக உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்<br>ஆ) பொதுமக்களிடம் / பயணிகளிடம் வசூல் செய்யப்படும் மொத்த வருவாயில் மாநகராட்சியின் பங்காக 25 சதவீதமும், தனியார் நிறுவனத்திற்கு 75 சதவீதமும் (ஊதியம், பராமரிப்பு உட்பட அனைத்து செலவினம் உட்பட) பங்கீடு சதவீதம் அடிப்படையில் முன்னோட்டமாக மூன்று மாத கால அளவிற்கு மட்டும் உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்<br>அலுவலக குறிப்பு__:- "அ" மற்றும் "ஆ" மாமன்றம் அனுமதிக்கலாம் அ16/5134/2025 | |
| | 19) தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலம் பூபால்ராயபுரம் பகுதியில் அமைந்துள்ள மீன் மார்க்கெட் பகுதியில் உள்ள கடைகளுக்கு வியாபாரிகளிடம் தினசரி கட்டணம் வசூல் செய்து வரப்படுகிறது,. இந்நிலையில் மார்க்கெட் வளாகம் நவீன வசதிகளுடன் புதியதாக அபிவிருத்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. மாநகராட்சியின் வருவாயினை பெருக்கிடும் | 754)அலுவலகக் குறிப்பு அ அனுமதிக்கப்பட்டது. ஆ செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |

<table>
<tr>
<td></td>
<td>நோக்கிலும், பராமரிப்பு, மின் கட்டண செலவினங்கள் மற்றும் வியாபார பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில் மாநகராட்சி எதிர்நோக்கும் கூடுதல் செலவினங்களை ஈடு செய்யும் வகையிலும், புதிய கட்டிடத்தில் நாள் ஒன்றுக்கு பயன்பாட்டு கட்டணம் ரூ. 50/– வசூல் செய்திட மாமன்ற பார்வைக்கும் முடிவிற்கும்,<br><u>அலுவலக குறிப்பு</u> :–<br>அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) இரசீது புத்தகங்கள் அச்சிடுவது மற்றும் அதற்கான செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>அ16/5135/2025</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>20) தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் பொது மக்கள் அதிகமாக பயன்படுத்தும் இடங்களில் அமைந்துள்ள கழிப்பறைகளின் தரம் உயர்த்தி பொது மக்களை சுகாதார கேடிலிருந்து பாதுகாத்திடவும், 24 மணி நேரமும் சுகாதாரமான முறையில் பொது மக்கள் பயன் படுத்தும் வகையில் மாநகராட்சியில் உள்ள அனைத்து பொது கழிப்பறைகளை தொண்டு நிறுவனம் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுகாதார அலுவலர் மற்றும் மாநகர் நல அலுவலர் அவர்களின் அறிக்கையில் சுலப் இண்டர்நேஷனல் சமூகசேவை நிறுவனத்திற்கான பணி உத்தரவு காலம் 11.11.2025 தேதியுடன் முடிவடைந்த நிலையில் பொது மக்கள் அதிகம் கூடும் இடத்தில் பொது சுகாதாரம் பேணுவதன் அவசியம் கருதி பணி உத்தரவினை ஒப்பந்த நடவடிக்கை மேற்கொள்ளும் வரை தற்காலிகமாக நீட்டிப்பு செய்திடவும், அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். மேலும் தொற்று நோய் பரவாமல் பொது மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு முத்துநகர் கடற்கரையில் அமைந்துள்ள பொது கழிப்பறைகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள கீழ்கண்ட விபரப்படி உத்திரவு வழங்கப்பட்டு 12.08.2024 தேதி முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனம்</th><th>மாதம் ஒன்றுக்கு தொகை (ரூ.) (GST சேர்த்து)</th></tr>
<tr><td>1</td><td>சுலப் இண்டர்நேஷனல் சமூகசேவை நிறுவனம்</td><td>1,50,000</td></tr>
</table>
சுலப் இண்டர்நேஷனல் சமூகசேவை நிறுவனம் 11.11.2025 முதல் மேலும் ஓராண்டு பணிகள் நீட்டித்து வழங்க கேட்டுகொண்டுள்ள விண்ணப்பம் மற்றும் சுகாதார அலுவலர், மாநகர் நல அலுவலர் அவர்களின் பரிந்துரையின் பேரில் அன்னாருக்கு 11.11.2025 முதல் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையில்</td>
<td>755)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது,<br>3.அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>எவ்வித தொகை மாற்றமின்றி ரூ.1,50,000/– (ஒரு மாதத்திற்கு) நீட்டித்து வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், மேலும் மேற்படி பணிகள் மேற்கொள்வதால் (12.11.2025 முதல் 11.11.2026) ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.18,00,000/–னை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. சுலப் இண்டர்நேஷனல் சமூகசேவை நிறுவனம் என்ற நிறுவனத்தின் தொகை ரூ.1,50,000/–னை (ஒரு மாதத்திற்கு) (12.11.2025 முதல் 11.11.2026 மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும் மேற்படி பணிகள் மேற்கொள்வதால் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.18,00,000/–னை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3. அவசர அவசியம் கருதி மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>எச்3/0918/2024–3</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>21) தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் பொது மக்கள் அதிகமாக பயன்படுத்தும் இடங்களில் அமைந்துள்ள கழிப்பறைகளின் தரம் உயர்த்தி பொது மக்களை சுகாதார கேடிலிருந்து பாதுகாத்திடவும், 24 மணி நேரமும் சுகாதாரமான முறையில் பொது மக்கள் பயன் படுத்தும் வகையில் மாநகராட்சியில் உள்ள அனைத்து பொது கழிப்பறைகளை தொண்டு நிறுவனம் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுகாதார அலுவலர் மற்றும் மாநகர் நல அலுவலர் அவர்களின் அறிக்கையில் சுலப் இண்டர்நேஷனல் சமூகசேவை நிறுவனத்திற்கான பணி உத்தரவு காலம் 11.11.2025 தேதியுடன் முடிவடைந்த நிலையில் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பொது சுகாதாரம் பேணுவதன் அவசியம் கருதி பணி உத்தரவினை ஒப்பந்த நடவடிக்கை மேற்கொள்ளும் வரை தற்காலிகமாக நீட்டிப்பு செய்திடவும், அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். மேலும் தொற்று நோய் பரவாமல் பொது மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் (ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலையத்தில்) அமைந்துள்ள பொது கழிப்பறைகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள கீழ்கண்ட விபரப்படி உத்திரவு வழங்கப்பட்டு 12.08.2024 தேதி முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனம்</th><th>மாதம் ஒன்றுக்கு தொகை (ரூ.) (GST சேர்த்து)</th></tr>
<tr><td>1</td><td>சுலப் இண்டர்நேஷனல் சமூகசேவை நிறுவனம்</td><td>1,50,000</td></tr>
</table>
</td>
<td>756) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது,<br>3.அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | சுலப் இண்டர்நேஷனல் சமூகசேவை நிறுவனம் 12.11.2025 முதல் 11.11.2026 மேலும் ஓராண்டு பணிகள் நீட்டித்து வழங்க கேட்டுகொண்டுள்ள விண்ணப்பம் மற்றும் சுகாதார அலுவலர், மாநகர் நல அலுவலர் அவர்களின் பரிந்துரையின் பேரில் அன்னாருக்கு 11.8.2025 முதல் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையில் எவ்வித தொகை மாற்றமின்றி ரூ.1,50,000/– (ஒரு மாதத்திற்கு) நீட்டித்து வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், மேலும் மேற்படி பணிகள் மேற்கொள்வதால் (12.11.2025 முதல் 11.11.2026) ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.18,00,000/–னை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. சுலப் இண்டர்நேஷனல் சமூகசேவை நிறுவனம் என்ற நிறுவனத்தின் தொகை ரூ.1,50,000/–னை (ஒரு மாதத்திற்கு) (12.11.2025 முதல் 31.10.2026மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும் மேற்படி பணிகள் மேற்கொள்வதால் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.18,00,000/–னை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3. அவசர அவசியம் கருதி மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>எச்3/0918/2024–4 | |
| | 22) தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் பொது மக்கள் அதிகமாக பயன்படுத்தும் இடங்களில் அமைந்துள்ள கழிப்பறைகளின் தரம் உயர்த்தி பொது மக்களை சுகாதார கேடிலிருந்து பாதுகாத்திடவும், 24 மணி நேரமும் சுகாதாரமான முறையில் பொது மக்கள் பயன் படுத்தும் வகையில் மாநகராட்சியில் உள்ள அனைத்து பொது கழிப்பறைகளை தொண்டு நிறுவனம் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தொற்று நோய் பரவாமல் பொது மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு இராஜாஜி பூங்கா, மருத்துவகல்லூரி மருத்துவமனை வளாகம், ரோச்பூங்கா ஆகிய இடங்களில் **அமைந்துள்ள பொது கழிப்பறைகளை** பராமரிப்பு பணிகளை ஏற்கனவே மேற்கொண்டு வரும் சுலப் இண்டர்நேஷனல் சமூகசேவை நிறுவனத்திடம் ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1) 1.01.2026 முதல் பராமரிப்பு பணியை ஓராண்டிற்கு அனுமதிக்கலாம். | 757) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2, மேற்படி பராமரிப்பு செலவினத்தை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்3/0918/2024–4 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 31.12.2025

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி